**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.194/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw7/Pw4 |
| Name | : Siva |
| Father/Husband's Name | : Mani |
| Village | : |
| Taluk | : Thirukazhukundram |
| Calling | : |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.11.2025.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் Photographer ஆக வேலை செய்து வருகிறேன். 28.11.2023ம் தேதி மதியம் நேரத்தில் மகேந்திரா சிட்டில் இருக்கும் எனது மாமியார் வீட்டில் நகை காணவில்லை என்று நான், எனது மனைவி, மாமியார், மாமியாரின் அம்மா ஆகியோர்கள் தேடினோம். ஆஜர் எதிரி எனது மாமியாரின் அம்மாவிற்கு உதவி செய்வதால் அவர் மட்டும் தான் வீட்டிற்குள் வருவார் என்பதாலும், சந்தேகத்தின் பேரில், எதிரி மீது புகார் கொடுத்தோம். எதிரி நகையை குரோம்பேட்டையில் இருக்கும் சேட்டு கடையில் அடகு வைத்ததாக அவர் சொன்னார். என்னிடம் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்துக்கள் முறையே **அதசா.ஆ3 மற்றும் அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு போலீசார் நகையை கைப்பற்றி என்னிடம் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் எனது மாமியார் என்றால் சரிதான். சாட்சிகள் சரஸ்வதி, கீர்த்தனா, சங்கரன், லலிதா, ஏழுமலை ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். புகார்

கொடுக்கும் போது நானும் அவர்களுடன் சென்றேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana

Judicial Magistrate No.II,
Chengalpattu.